(2020)8 எஸ்.சி.ஆர். 731

சுபேத் அலி மற்றும் பிலர்

–எதிர்–

அசாம் மாநில அரசு

(குற்றவியல் மேல்முறையீடு எண் 1401/ 2012)

2020 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30–ஆம் நாள்

[மாண்புமிகு நீதியரசர்கள் திரு ரோஹிங்க்டன் ஃபலி நரிமன்,

திரு. நவீன் சின்ஹா

மற்றும் திரு. இந்திரா பானர்ஜீ]

இந்திய தண்டனைச் சட்டம் – 1860 – பிரிவு 302 உ/இ பிரிவு 34 – சந்தையில் இருந்து மற்றவர்களுடன் மிதிவண்டியில் திரும்பி வந்துகொண்டிருந்தவர்களுள் இருவர் தாக்கப்பட்டதாக அரசு தரப்பால் கூறப்பட்டது – அவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே இறந்தார், மற்றொருவர் மருத்துவமனையில் உயிரிழந்தார் – மேல்முறையீட்டாளர்கள் – எதிரிகள், இ,த,ச., பிரிவு 302 உ/இ பிரிவு 34–இன் கீழ் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது – தொடக்கத்தில் எதிரிகள் ஐவரின் பெயரில் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது – சந்தேகத்தின் பலனை எதிரி 3 மற்றும் 5–க்கு அளித்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் – அவர்களின் விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் தொடரப்படவில்லை – சந்தேகத்தின் பலனை அளித்து இரு எதிரிகள் விடுதலை செய்யப்பட்ட

நிலையில், அதே சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்முறையீட்டாளர்களை குற்றவாளிகளென தீர்மானித்தது நியாயமற்றது என்று மேல்முறையீட்டாளர்கள் வாதிட்டனர் – **மேல்முறையீட்டின் முடிவு** : முதலாம் மேல்முறையீட்டாளர் இறந்தவரை தடுத்ததாகவும், 2–ஆம் மேல்முறையீட்டாளர் அவர்களில் ஒருவரை தாக்கி அவர் சம்பவ இடத்தில் இறந்ததாகவும், 3–ஆம் மேல்முறையீட்டாளர் மற்றொரு பாதிக்கப்பட்டவரை தாக்கி காயப்படுத்தியதாகவும் அ.சா 5,6,7 மற்றும் 9 ஆகியோர் சான்றுரைத்தனர் – மற்றொரு பாதிக்கப்பட்டவர் நிகழ்விடத்தில் இருந்து தப்பியோட முயன்றபோது, அவர் எதிரிகளால் துரத்திப் பிடிக்கப்பட்டு கொடூரமாக தாக்கப்பட்டார் – பாதிக்கப்பட்ட மற்றொருவர் பின்னர் மருத்துவமனையில் உயிரிழந்தார் – நிகழ்விடத்தில் 2 மற்றும் 3–ஆம் மேல்முறையீட்டாளர்கள் இருந்ததையும், மரணித்த இருவரின் மீது இவர்கள் தாக்குதல் நடத்தியதையும் சந்தேகித்து, சந்தேகத்தின் பலனை அளித்து இவர்களை விடுதலை செய்யவோ, விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படவில்லை என்பதற்காகவே, விடுதலை செய்யப்பட்டவர்களுடன் இவர்களை சமமாக பாவிக்கவோ எந்த ஒரு காரணமும் இல்லை – முதலாம் மேல்முறையீட்டாளரை பொருத்தவரையில், அவர் தான் மரணமடைந்த இருவரையும் சந்தையில் இருந்து திரும்பி வந்து கொண்டிருந்த போது வழிமறித்து நிறுத்தினார், அவ்வாறு நின்றபின் தான் இறந்தவர்கள் மீதான தாக்குதல் ஆரம்பமானது – இதற்கு மேலும் முதலாம் மேல்முறையீட்டாளருக்கு

இவ்வழக்கு சம்மந்தப்பட்ட குற்றத்தை புரிய பொது உட்கருத்து இருந்ததற்கான சான்றாவணம் வேறெதுவும் தேவையில்லை – விளைவாக, மேல்முறையீட்டாளர் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டதிலும், அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பிலும் தலையிடுவதற்கு எவ்வித காரணமும் இல்லை.

குற்றவியல் சட்டம் – பொது உட்கருத்து – முடிவு:

பொது உட்கருத்து என்பது ஒரே நோக்கத்தை அடைய பல நபர்களின் பங்கு வெவ்வேறாக இருப்பினும், ஒருமித்து செயல்படுவதை உள்ளடக்கும் – பொது உட்கருத்து நிறுவப்பட்ட பின், அவர்களின் பங்கு நேரடியான செயல்பாடுடன் கூடிய பங்கா அல்லது மறைமுகமான செயல்பாடற்ற பங்கா என்பது தொடர்பற்றது – பொது உட்கருத்திற்கு நேரடி சாட்சியம் இருப்பது அரிது – இது, குற்றத்தில் பங்கெடுத்த ஒவ்வொருவருக்கும் எதிராக கிடைத்துள்ள சாட்சியத்தின் தன்மையை திரளாக மதிப்பீடு செய்து வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் இருந்து உய்த்துணர வேண்டிய ஒன்று – ஒரு நபர் யாருடன் பொது உட்கருத்தை பகிர்ந்து கொள்கிறாரோ அவர்களின் செயல்களுக்கு அந்நபரும் பொறுப்பாளி ஆகிறார் என்கிற பகரப்பொறுப்பு கொள்கை தான் பொது உட்கருத்தின் அடிப்படையில் ஒருவர் குற்றவாளியென தீர்மானிக்கப்படுவதன் அடித்தளம்.

மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:

1. இதை போலவே அ.சா–6,7 மற்றும் 9 ஆகியோர் சான்றுரைத்தது யாதெனில், 1–ஆம் மேல்முறையீட்டாளர் இறந்துபோன இருவரையும் நிறுத்தினார், 2–ஆம் மேல்முறையீட்டாளர் அப்துல் பாரக்கை 'டாவோ' என்கிற கூர்மையான ஆயுதம் கொண்டு தாக்கியதால் அவ்விடத்திலேயே உயிரிழந்தார், 3–ஆம் மேல்முறையீட்டாளர் அப்துல் மோதினை தாக்கி காயப்படுத்தினார். காயமடைந்தவர் நிகழ்விடத்தில் இருந்து தப்பிக்க முயன்றார். அவர் எதிரிகளால் துரத்திவரப்பட்டு மாமுத் அலி என்பவரின் வீட்டருகே பிடிபட்டு கொடூரமாக தாக்கப்பட்டார். பின்னர் அப்துல் பாரக் கிடத்தப்பட்ட இடத்திற்கு அவர் இழுத்துவரப்பட்டார். காயமடைந்த நபர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அன்றிரவே அவர் மரணமடைந்தார். சம்பவம் நடந்த நேரம், சூரிய அஸ்தமனத்திற்குப் பின்புள்ள மாலைவேளையெனினும் இருட்டாக இல்லை, ஆகவே அடையாளம் காட்டுவது சாத்தியம் என்று அ.சா– 5,7 மற்றும் 9 ஆகியோர் அளித்த உறுதியான சாட்சியத்தை கருத்தில் கொண்டு, அ.சா–6 தன் குறுக்கு விசாரணை சான்றுரையில் இருட்டின் காரணமாக அடையாளம் காட்டுவது பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறியது எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. எப்படியிருந்தாலும், தரப்பினர்களுக்கு முன்பிலிருந்தே ஒருவரையொருவர் தெரியும் என்பதால் இருட்டில் அடையாளம் கண்டுகொண்டதை சந்தேகிக்க முடியாது என்பது தெளிவாகிறது.

2. ஆகையால், நிகழ்விடத்தில் 2 மற்றும் 3–ஆம் மேல்முறையீட்டாளர்கள் இருந்ததையும், மரணித்த இருவரின்மீது இவர்கள் தாக்குதல் நடத்தியதையும் சந்தேகிப்பதற்கோ, அச்சந்தேகத்தின் பலனை அளித்து இவர்களை விடுதலை செய்யவோ, அவ்வாறு விடுதலை செய்யப்பட்ட எதிரிகளின் விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படவில்லை என்பதற்காகவே, விடுதலை செய்யப்பட்டவர்களுடன் இவர்களை சமமாக பாவிக்கவோ இந்த நீதிமன்றம் எந்த ஒரு காரணத்தையும் காணவில்லை.

3. இப்போது நீதிமன்றத்தின் கருதுதலுக்காக விடப்பட்டுள்ளது என்னவென்றால், தனிப்பட்ட செயல்களுக்கு பொறுப்பாளிகளாக உள்ள 2 மற்றும் 3–ஆம் மேல்முறையீட்டாளர்களுடன் 1–ஆம் மேல்முறையீட்டாளர் எவ்வித பொது உட்கருத்தும் பகிர்ந்திருந்ததாக கூறமுடியாது என்பதால் அவர் விடுதலை செய்ய தகுதியுடையவர். பொது உட்கருத்து என்பது, பல நபர்களின் பங்கு வேறுபட்டிருந்தாலும், அவர்களின் செயல் ஒரே நோக்கத்தை அடைவதற்காக ஒருமித்து செயல்படுவதை உள்ளடக்கும். பொது உட்கருத்து நிறுவப்பட்ட பின், அவர்களின் பங்கு நேரடியான செயல்பாடுடன் கூடிய பங்கா அல்லது மறைமுகமான செயல்பாடற்ற பங்கா என்பது தொடர்பற்றது. பொது உட்கருத்திற்கு நேரடி சாட்சியம் இருப்பது அரிது. இது, குற்றத்தில் பங்கெடுத்த ஒவ்வொருவருக்கும் எதிராக கிடைத்துள்ள சாட்சியத்தின் தன்மையை திரளாக மதிப்பீடு செய்து வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் இருந்து உய்த்துணர வேண்டிய ஒன்று. ஒரு

நபர் யாருடன் பொது உட்கருத்தை பகிர்ந்து கொள்கிறாரோ அவர்களின் செயல்களுக்கு அந்நபரும் பொறுப்பாளி ஆகிறார் என்கிற பகரப்பொறுப்பு கொள்கை தான் பொது உட்கருத்தின் அடிப்படையில் ஒருவர் குற்றவாளியென தீர்மானிக்கப்படுவதன் அடித்தளம். ஒரு செயலை செய்வதற்கான எண்ணம் அல்லது உட்கருத்து இருந்தது என்று நம்பத்தக்கவிதமாக நிறுவப்பட்டால், தாக்குதலில் நேரடியான பங்கேற்பு இல்லாவிட்டாலும், அதுவே குற்றவாளியென தீர்மானிக்க போதுமானது. ஆகவே ஒருவரை பொது உட்கருத்தின் காரணமாக குற்றவாளியென தீர்மானிக்க, அவர் தன் உடல் இயக்கத்தை கொண்டு தாக்குதலில் நேரடியாக ஈடுபட்டிருக்க வேண்டும் என்றில்லை. முன்பே ஏற்பாடு செய்யப்பட்ட திட்டம் மற்றும் அத்திட்டத்தின் தொடர்ச்சியாக ஒருமித்து செயல்படுதல் ஆகியவற்றை சாட்சியம் வெளிப்படுத்தினால், அதிலிருந்து பொது உட்கருத்தை உணரமுடியும். ஒரு குறிப்பிட்ட விளைவை உருவாக்க வேண்டும் என்ற பொது உட்கருத்து பல நபர்களுக்கிடையே நிகழ்விடத்தில் கூட உருவாகலாம், இது ஒரு குறிப்பிட்ட வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் இருந்து புரிந்துகொள்ளக்கூடியது. நிகழ்விடத்திற்கு எதிரிகள் சேர்ந்து வருதல், அவர்களில் சிலரோ அல்லது அனைவருமோ ஆயுதம் ஏந்தியிருத்தல், தாக்குதலின் விதம், எதிரிகளின் செயல்பாடு மிக்க அல்லது செயல்பாடற்ற பங்கு, ஆகியவை பொது உட்கருத்தை உய்த்துணர உதவும் சில கூறுகள்.

4. இந்த வழக்கின் பொருண்மைகள் குறித்து விவாதிக்கையில், 1–ஆம் மேல்முறையீட்டாளர், ஆயுதம் ஏந்திய மற்ற இரு மேல்முறையீட்டாளர்களுடன் காத்துக்கொண்டு இருந்திருக்கிறார். சந்தையில் இருந்து திரும்பி சென்றுகொண்டு இருந்த இறந்துபோன இருவரையும் 1–ஆம் மேல்முறையீட்டாளர் நிறுத்தினார். அவ்வாறு நிறுத்தப்பட்ட பின்னரே, இறந்த நபர்களின் மீது தாக்குதல் தொடங்கியது. பணம் தொடர்பான ஏதோவொரு சர்ச்சை அவர்களுக்குள் இருந்திருப்பது சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து வெளிப்படையாக தெரிகிறது. கொடூர தாக்குதலின் விளைவாக அப்துல் பாராக் நிகழ்விடத்திலேயே மரணமடைந்தார். அப்துல் மோதின், 3–ஆம் மேல்முறையீட்டாளர் செய்த முதல் தாக்குதலில் காயமுற்று, அதன் பின்னர் தப்பிக்க முயன்றார். மற்ற எதிரிகளுடன் இணைந்து 1–ஆம் மேல்முறையீட்டாளரும் அவரை துரத்திச்சென்று, மாமூத் அலியின் வீட்டருகே அவரை பிடித்து கொடூரமாக தாக்கினர். பிறகு, அசைவின்றி இருக்கும் அப்துல் பாராக் கிடத்தப்பட்ட இடத்திற்கு எதிரிகள் அப்துல் மோதினை இழுத்துச் சென்றனர். கேள்விக்குரிய குற்றத்தை புரிவதற்கான பொது உட்கருத்து 1–ஆம் மேல்முறையீட்டாளருக்கு இருந்ததை குறித்து கூடுதல் ஆதாரம் தேவையில்லை. எனவே, அந்த காரணத்திற்காக எந்தவொரு பொது உட்கருத்தும் இருந்தது என்பதை மறுத்து, தாக்குதல் தொடர்பாக 1–ஆம் மேல்முறையீட்டாளரின் பங்கோ அல்லது செயலோ இல்லை என்ற அவரது வாதுரையின் பேரில்,

சந்தேகத்தின் பலனை அவருக்கு அளிப்பதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஏதொரு காரணமும் தென்படவில்லை.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

கர்னெய்ல் சிங்– எதிர்– பஞ்சாப் அரசு, **1954 எஸ்.சி.ஆர். 904 ;**

ராமசுவாமி அய்யங்கார் –எதிர் –தமிழ் நாடு அரசு **(1976) 3 எஸ்.சி.சி. 779 : [1976] 3 எஸ்.சி.ஆர். 876**

நந்து ரஸ்தோகி –எதிர்– பீகார் அரசு **(2002) 8 SCC 9 : [2002] 3 சப். எஸ்.சி.ஆர். 30 ;**

சுரேந்தர் சௌஹான் *–எதிர்– மத்திய பிரதேச அரசு* **(2000) 4 எஸ்.சி.சி. 110 : [2000] 2 எஸ்.சி.ஆர். 515**

நந்த் கிஷோர் *–எதிர்– மத்திய பிரதேச அரசு* **(2011) 12 எஸ்.சி.சி. 120 : [2011] 7 எஸ்.சி.ஆர். 1152 – ஆகியவை எடுத்தாளப்பட்டுள்ளன**

தீர்ப்பு வழிச் சட்டங்கள்–மேற்கோள்

[1954] எஸ்.சி.ஆர்.904	பத்தி எண் 8	எடுத்தாளப்பட்டுள்ளது
[1976] 3 எஸ்.சி.ஆர்.876	பத்தி எண்14	எடுத்தாளப்பட்டுள்ளது
[2002] 3 சப். எஸ்.சி.ஆர்.30	பத்தி எண்15	எடுத்தாளப்பட்டுள்ளது
[2000] 2 எஸ்.சி.ஆர்.515	பத்தி எண்16	எடுத்தாளப்பட்டுள்ளது
[2011] 7 எஸ்.சி.ஆர்.1152	பத்தி எண்17	எடுத்தாளப்பட்டுள்ளது

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண். 1401/2012

குற்றவியல் மேல்முறையீடு எண்.32/2009–இல் கவுஹாத்தி உயர்நீதிமன்றம் பிறப்பித்த 03.04.2012 ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

தரப்பினர்களுக்காக முன்னிலையான வழக்குரைஞர்கள் – கௌரவ் அக்ரவால், சாரு அம்ப்வானி தயேஞ்சம் மோமோ சிங், திபோஜித் போர்ககாட்டி.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் **திரு நவீன் சின்ஹா** அவர்களால் வழங்கப்படுகிறது:

1. இந்திய தண்டனைச் சட்டம் (சுருக்கமாக இ.த.ச) பிரிவு 302 உ/இ பிரிவு 34–இன் கீழ் மேல்முறையீட்டாளர்களை குற்றவாளிகளென தீர்மானித்து வடக்கு லக்கிம்பூர் அமர்வு நீதிபதியால் வழங்கப்பட்ட குற்றத்தீர்ப்பு, உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டு மேல்முறையீட்டாளர்களுக்கு அபாரதத்துடன் கூடிய ஆயுள் தண்டனையும், தவறும் பட்சத்தில் நிபந்தனையுடன் கூடிய தண்டனையும் விதிக்கப்பட்டது. ஆகவே மேல்முறையீட்டாளர்களின் இந்த மேல்முறையீடு.

2. இறந்துபோன அப்துல் மோதின் மற்றும் அப்துல் பாரக் ஆகியோர், மேலும் சிலருடன் 05.08.2005–ஆம் தேதி மாலை சுமார் 6 மணியளவில், மிதிவண்டியில் சந்தையில் இருந்து திரும்பி கொண்டிருக்கும்போது தாக்கப்பட்டனர் என்று அரசுத் தரப்பு

குறிப்பிட்டுள்ளது. அப்துல் பாரக் நிகழ்விடத்திலேயே மரணமடைந்தார். அன்றிரவு மருத்துவமனையில் அப்துல் மோதின் சிகிச்சையின்போது மரணமடைந்தார். ஆரம்பத்தில் எதிரிகள் ஐவரின் பெயரில் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது. சந்தேகத்தின் பலனை எதிரி 3 மற்றும் 5–க்கு அளித்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களின் விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்பட்டதாக எங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை.

3. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.கௌரவ் அக்ரவால் பணிந்துரைத்ததாவது, சந்தேகத்தின் பலனை அளித்து இரு எதிரிகள் விடுதலை செய்யப்பட்ட நிலையில், அதே சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்முறையீட்டாளர்களை குற்றவாளிகளென தீர்மானித்தது நியாயமற்றது, அவர்களும் சந்தேகத்தின் பலனை பெற்று விடுதலை பெற தகுதியானவர்கள். கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.5,6,7 மற்றும் 9 ஆகியோரின் சாட்சியத்தில் பல முரண்பாடுகள் உள்ளன. அ.சா–6 இன் குறுக்கு விசாரணையின் படி, இருள் சூழ ஆரம்பித்த பின்னர் தான் சம்பவம் நடந்திருக்கிறது என்பதால் அடையாளம் காண்பது ஐயத்துக்குரியது. மேல்முறையீட்டாளர்கள்தான் தாக்குதல் நிகழ்த்தியவர்கள் என்று பாபுலால் மற்றும் அஸ்கர் அலி தெரிவித்ததாக அ.சா.–1 சான்றுரைத்தார். அவர்கள் இருவரையும் அரசு தரப்பு விசாரிக்கவில்லை. இறந்தபோன இருவரின் மீதும் 2 மற்றும் 3–ஆம் மேல்முறையீட்டாளர்கள் தாக்குதல் நடத்தியதாக கண்ணுற்ற சாட்சிகள்

சான்றுரைத்துள்ளனர். முதலாம் மேல்முறையீட்டாளர் ஏதாவது ஒருவிதத்தில் ஆயுதம் ஏந்தி இருந்ததாகவோ அல்லது இறந்தவருள் யாரேனும் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியதாகவோ சாட்டுரைக்கப்படவில்லை. எனவே முதலாம் மேல்முறையீட்டாளருக்கு பொது உட்கருத்து இருந்திருக்கக்கூடும் என்று அனுமானிப்பதற்கு ஆதாரம் இல்லை. 2 மற்றும் 3–ஆம் மேல்முறையீட்டாளர்கள், இறந்தவர்கள் மீது அவரவர் நிகழ்த்திய தாக்குதலுக்காக தனிப்பட்ட முறையில் பொறுப்பாகிறார்கள். மேல்முறையீட்டாளர்களின் மூலம் கண்டறியப்பட்டதாக கூறப்பட்டவை நம்பப்படவில்லை. இ.த.ச., பிரிவு 34 –இன் கீழ் குற்றச்சாட்டு வணையப்படவில்லை என்று இறுதியாக பணிந்துரைக்கப்பட்டது.

4. தாக்குதலில் மேல்முறையீட்டாளர்களின் பங்கெடுப்பு குறித்த கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.5,6,7 மற்றும் 9–இன் சாட்சியம் உறுதியானது என்றும், மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக கிடைத்துள்ள ஆதாரங்களின் தன்மையை கருத்தில் கொண்டு பார்க்கையில், சந்தேகத்தின் பலனாய் இரண்டு உடன்–குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டது மேல்முறையீட்டாளர்களுக்கு பயனளிக்காது என்றும், மேல்முறையீட்டாளர்கள் ஆயுதம் ஏந்தி இறந்து போன இருவருக்காகவும் காத்துக்கிடந்து, அவர்கள் சந்தையில் இருந்து திரும்புகையில் வழிமறித்து அதனை தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதல் இருவரின் மரணத்தில் முடிந்தது என்கிற பொருண்மையிலிருந்து, பொது உட்கருத்து இருந்தமை தெளிவாக நிறுவப்பட்டது என்றும்

அரசின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார்.

5. இரு தரப்பினரின் பணிந்துரைகளையும் நாங்கள் கருத்தில் எடுத்துக்கொண்டோம். அ.சா– 5,6, 7 மற்றும் 9– உடன் சேர்ந்து சந்தையில் இருந்து திரும்பி சென்று கொண்டிருந்த 2 இறந்தவர்களும், மேல்முறையீட்டாளர்களால் இடைமறித்து நிறுத்தப்பட்டு தாக்கப்பட்டனர். அப்துல் பாரக் நிகழ்விடத்திலேயே மரணமடைந்தார். அவரது சடலக் கூராய்வை நடத்திய அ.சா 8, தம் அறிக்கையில் பின்வரும் காயங்களை இறந்தவரின் உடலில் கண்டார்:

> "இடது கணுக்கால் மூட்டுக்கு 8 செ.மீ மேலே, இறந்தவரின் இடதுகால் துண்டிக்கப்பட்டு இருந்தது சடலக் கூராய்வின் போது கண்டறியப்பட்டது. துண்டிக்கப்பட்ட பாகத்தின் 6 செ.மீ x 4 செ.மீ அளவுள்ள காயம் வெட்டுக்காயம் போல இருந்தது. காலின் இரு எலும்புகளிலும் சுத்தமான வளைந்த கூர்மையான வெட்டு காணப்பட்டது. தசைகள், முக்கிய இரத்த நாளங்கள் முழுக்க முழுக்க சிதைந்து இருந்தன. துண்டிக்கப்பட்ட பாகத்திலும் இதேபோன்ற காயம் காணப்பட்டது. காயத்தின் தன்மை அது இறப்பிற்கு முன்பு உண்டானது என்று காட்டுகிறது. மற்ற உறுப்புகள் ஆரோக்கியமாக இருந்தன."

6. இதேபோன்று அப்துல் மோதினின் சடலக் கூராய்வை செய்த அ.சா.10, அவரின் உடலில் பின்வரும் காயங்களை கண்டார்:

"6–வது மேல் மற்றும் கீழ் கை கால் எலும்புகளில் (limbs) உடல் விறைப்பு காணப்பட்டது. உடல் மிகவும் வெளிறிப்போய் இருந்தது, 6–வது கீழ் எலும்பில் பல்வேறு கூரிய வெட்டுக்கள் இருந்தன. இடது கணுக்கால் மூட்டுக்கு ஒரு அங்குலம் மேலே வரை இடது பாதம் வெட்டப்பட்டு காலின் மேற்பாகத்திலிருந்து துண்டிக்கப்பட்டு இருந்தது, மேலும் அது சடலக் கூராய்வின் போது உடலுடன் சேர்ந்து காணப்படவில்லை.

1. கணுக்கால் மூட்டுக்கு சுமார் ஒரு அங்குலம் மேலே இடது காலின் கீழ் எலும்புகளில் ஏற்படுத்தப்பட்ட கூர்மையான வெட்டு, இடது காலில் இருந்து இடது பாதம் முழுமையாக துண்டிக்கப்படுவதற்கு காரணமாகிறது. இரண்டு காலின் எலும்புகள், தோல், மென் திசுக்கள் மற்றும் நாளங்கள் வெட்டப்பட்டு, அதீத இரத்தக்கசிவையும் தோல் திசு நீக்கமும் (skin margins) உண்டாக்கியிருந்தது. அனைத்து காயங்களும் கூர்மையாகவும் சுருங்கியும் (retracted) காணப்பட்டன. தசைகள், தசைநார் மற்றும் நாளங்களும் சுருங்கியிருந்தன.
2. இடது காலில் முன் பக்கத்தில் மேல் மற்றும் நடு இழைகளின் இணைப்பில் 2 அங்குலம் அளவுள்ள கூர்மையான வெட்டு காயம் சாய்வாக உள்ளது. தோலில் வெட்டு ஏற்பட்டு, இடது முன் கால் எலும்பு, கெண்டைக்கால் நடுப்பகுதியில் வெட்டு

மற்றும் முறிவு, ரத்த நாளங்களில் வெட்டு ஏற்படுத்தி குருதிப் போக்கை உண்டாக்கியது.

3. இடது காலில் நடு இழையில் (middle thread of right leg) 2 அங்குலம் அளவுள்ள மற்றொரு வெட்டு காயம் முன்பக்க நடுப்பகுதியையும், வெளிப்புறத்தோலையும் வெட்டி, இடது முன்கால் (tibia) எலும்பு முறிவையும், போதுமான ரத்தக்கசிவையும் ஏற்படுத்தியுள்ளது. இது கெண்டைக்கால் தசைகளையும் வெட்டியுள்ளது.

4. இடது கணுக்காலின் பக்கவாட்டில் சாய்வாக கீழ் நோக்கிய கூர்மையான வெட்டு காயம். 3 ½ அங்குல அளவுள்ள இவ்வெட்டால், இடது கணுக்கால் 2/3 பங்கு பிளக்கப்பட்டிருந்தது. தோல், கால் சிம்பு எலும்பு (fibula) தசை நாரின் கீழ்ப்பகுதி, தசைகள், நாளங்கள் மற்றும் குதிகால் எலும்பின் (calcaneus bone) மேல்பகுதி ஆகியவை வெட்டப்பட்டு முன்பக்கத்தில் ரத்தக்கசிவு (anterior haemorrhage) ஏற்பட்டிருந்தது.

காயத்தின் தன்மை அது இறப்பிற்கு முன்பு உண்டானது என்று காட்டுகிறது. மற்ற உறுப்புகள் ஆரோக்கியமாக இருந்தன."

7. கிராமத்தலைவரான அ.சா–1 அளித்த வாய்மொழி தகவலின்படி, அடையாளம் தெரியாத சிலர் இறந்துபோனவர்களை தாக்கி, ஒருவர் சம்பவ இடத்திலேயே இறந்தார், மற்றொருவர் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளார் என்ற குறிப்பு

05.08.2005 அன்று இரவு 9 மணியளவில் வடக்கு லக்கிம்பூர் காவல்நிலையத்தில் பொது நாட்குறிப்பேட்டில் குறித்துக்கொள்ளப்பட்டது. காயமடைந்தவரும் இறந்தபின்பு, 06.08.2005 அன்று மாலை 3:15 மணியளவில் இறந்தவர்களின் சகோதரரால் ஒரு முறையான முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது, அதில் மேல்முறையீட்டாளர்கள் உட்பட 5 பேர் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

8. குற்றம் சாட்டப்பட்ட ஐவர் மீதும் இ.த.ச., பிரிவுகள் 147, 341 மற்றும் 302–இன் கீழ் குற்றச்சாட்டு வணையப்பட்டது. பிரிவு 341–இன் கீழ் வணையப்பட்ட குற்றச்சாட்டு எதிரிகளுக்கு எதிராக நிரூபிக்கப்படவில்லை என தீர்மானிக்கப்பட்டது. அ.சா–1 மற்றும் 5 ஆகியோரின் சாட்சியத்தின் அடிப்படையில், 3 மற்றும் 5–ஆம் எதிரிகள் குற்றம் நடந்த இடத்தில் இருந்தமை குறித்தும் அவர்கள் குற்றத்தில் பங்கெடுத்தமை குறித்தும் ஐயம் உள்ளதால், அவர்களுக்கு சந்தேகத்தின் பலனை அளித்து அமர்வு நீதிபதி அவர்களை விடுதலை செய்தார். குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் எண்ணிக்கை ஐந்தை விட குறைவானதால், இ.த.ச., பிரிவு 302 உ/இ பிரிவு 34–இன் கீழ் மேல்முறையீட்டாளர்கள் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டனர். மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக கிடைத்திருக்கும் சாட்சியங்களின் உறுதித்தன்மையின் காரணமாக, கண்ணுற்ற சாட்சிகளின் சான்றுரைகள் இருந்தும் இரு உடன் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்பது மேல்முறையீட்டாளர்களுக்கு பலனளிக்காது. கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தில் உள்ள சிறு

குறைகள் மற்றும் முரண்பாடுகளால் எந்த பாதிப்பும் இல்லை. வழக்கின் அனைத்து முக்கிய அம்சங்கள் குறித்தும் இவர்கள் அளித்த உறுதியான சாட்சியம், இவர்களின் கண்ணுற்ற சாட்சியத்துக்கு நம்பகத்தன்மையை கொடுக்கிறது. பிரிவு 34–இன் துணைகொண்டு மேல்முறையீட்டாளர்களை குற்றவாளிகள் என தீர்மானித்ததில் எந்த குறைபாடும் நாங்கள் காணவில்லை. கர்னெய்ல் சிங் – எதிர்– பஞ்சாப் மாநில அரசு, 1954 எஸ்.சி.ஆர். 904 , என்கிற வழக்கில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:

> "8. ... எனினும், பிரிவு 149–ன் கீழான குற்றச்சாட்டு தொடர்பாக பொருண்மைகள் நிரூபிக்கப்பட்டதும், சான்றுகள் அளிக்கப்பட்டதும் ஒன்றாக இருந்து, அக்குற்றச்சாட்டுகள் பிரிவு 34–ன் கீழ் இருந்தால், எதிரிகளை பிரிவு 34–இன் கீழ் குற்றஞ்சாட்ட தவறியது எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது, அத்தகைய சந்தர்ப்பங்களில், பிரிவு 149–க்கு மாற்றாக பிரிவு 34–ஐ பொருத்துவது முறைப்படியானது என்றே தீர்மானிக்கப்பட்டது."

9. அ.சா.1 சம்பவத்தை நேரில் கண்ட சாட்சி அல்லர். அ.சா.1–இன் புலனாய்வு அதிகாரியின் சாட்சியத்தை கருத்தில் கொண்டு பார்க்கையில், பாபுலால் மற்றும் அஸ்கர் அலி ஆகிய இருவருமே அரசு தரப்பால் விசாரிக்கப்படவில்லை என்கிற பொருண்மை தொடர்பற்றதாக கருதப்படுகிறது. அரசு தரப்பை எதிர்கொண்டபோது, புலனாய்வு அதிகாரி–அ.சா.12, தன் புலன் விசாரணையில் அ.சா–1 அத்தகைய வாக்குமூலம் அளிக்கவில்லை என்று மறுத்துரைத்தார்.

10. இறந்த இரண்டு பேருடனும் சென்ற கண்ணுற்ற சாட்சி அ.சா–5 ஆவார். சம்பவம் நடந்த நேரத்தில் ஆள் அடையாளம் காண்பதற்கு போதுமான அளவு வெளிச்சம் இருந்ததாக அவர் சான்றுரைத்துள்ளார். 1–ஆம் மேல்முறையீட்டாளர் இறந்துபோன இருவரையும் நிறுத்தினார், அதன் பின்புதான் 2–ஆம் மேல்முறையீட்டாளர் அப்துல் பாரக்கின் காலில் கூர்மையான வெட்டும் ஆயுதம் கொண்டு தாக்கினார் என்று அ.சா–5 தன் குறுக்கு விசாரணையில் சான்றுரைத்தார். இறந்துபோன இரண்டாம் நபரான அப்துல் மோதின், 3–ஆம் மேல்முறையீட்டாளரால் காயப்படுத்தபட்டபின், தப்பிக்க முயன்றார். அவர் எதிரிகளால் துரத்தி வரப்பட்டு, மாமுத் அலி என்பவரின் வீட்டருகே பிடிபட்டார். இந்த சமயத்தில், அ.சா–5 தன் பாதுகாப்புக்கு அஞ்சி தப்பி ஓடிவிட்டார். அதன் பின்னர் இரு நபர்களும் இறந்ததை அறிந்து கொண்டார்.

11. இதை போலவே அ.சா–6,7 மற்றும் 9 ஆகியோர் சான்றுரைத்தது யாதெனில், 1–ஆம் மேல்முறையீட்டாளர் இறந்துபோன இருவரையும் நிறுத்தினார், 2–ஆம் மேல்முறையீட்டாளர் அப்துல் பாரக்கை 'டாவோ' என்கிற கூர்மையான ஆயுதம் கொண்டு தாக்கியதால் அவ்விடத்திலேயே உயிரிழந்தார், 3–ஆம் மேல்முறையீட்டாளர் அப்துல் மோதினை தாக்கி காயப்படுத்தினார். காயமடைந்தவர் நிகழ்விடத்தில் இருந்து தப்பிக்க முயன்றார். அவர் எதிரிகளால் துரத்திவரப்பட்டு மாமுத் அலி என்பவரின் வீட்டருகே பிடிபட்டு கொடூரமாக தாக்கப்பட்டார். பின்னர் அப்துல் பாரக் கிடத்தப்பட்ட இடத்திற்கு அவர்

இழுத்துவரப்பட்டார். காயமடைந்த நபர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அன்றிரவே அவர் மரணமடைந்தார். சம்பவம் நடந்த நேரம், சூரிய அஸ்தமனத்திற்குப் பின்புள்ள மாலைவேளையெனினும் இருட்டாக இல்லை, ஆகவே அடையாளம் காட்டுவது சாத்தியம் என்று அ.சா– 5,7 மற்றும் 9 ஆகியோர் அளித்த உறுதியான சாட்சியத்தை கருத்தில் கொண்டு, அ.சா–6 தன் குறுக்கு விசாரணை சான்றுரையில் இருட்டின் காரணமாக அடையாளம் காட்டுவது பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறியது எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. எப்படியிருந்தாலும், தரப்பினர்களுக்கு முன்பிலிருந்தே ஒருவரையொருவர் தெரியும் என்பதால் இருட்டில் அடையாளம் கண்டுகொண்டதை சந்தேகிக்க முடியாது என்பது தெளிவாகிறது.

12. ஆகையால், நிகழ்விடத்தில் 2 மற்றும் 3–ஆம் மேல்முறையீட்டாளர்கள் இருந்ததையும், மரணித்த இருவரின்மீது இவர்கள் தாக்குதல் நடத்தியதையும் சந்தேகிப்பதற்கோ, அச்சந்தேகத்தின் பலனை அளித்து இவர்களை விடுதலை செய்யவோ, அவ்வாறு விடுதலை செய்யப்பட்ட எதிரிகளின் விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படவில்லை என்பதற்காகவே, விடுதலை செய்யப்பட்டவர்களுடன் இவர்களை சமமாக பாவிக்கவோ எங்களுக்கு எந்த ஒரு காரணமும் தெரியவில்லை.

13. தனிப்பட்ட செயல்களுக்கு பொறுப்பாளிகளாக உள்ள 2 மற்றும் 3–ஆம் மேல்முறையீட்டாளர்களுடன் 1–ஆம் மேல்முறையீட்டாளர் எவ்வித பொது உட்கருத்தும் பகிர்ந்திருந்ததாக

கூறமுடியாது என்பதால் அவர் விடுதலை செய்ய தகுதியுடையவர் என்ற திரு அக்ரவால் அவர்களின் பணிந்துரை எங்களின் பரிசீலனைக்கு உள்ளது. பொது உட்கருத்து என்பது, பல நபர்களின் பங்கு வேறுபட்டிருந்தாலும், அவர்களின் செயல் ஒரே நோக்கத்தை அடைவதற்காக ஒருமித்து செயல்படுவதை உள்ளடக்கும். பொது உட்கருத்து நிறுவப்பட்ட பின், அவர்களின் பங்கு நேரடியான செயல்பாடுடன் கூடிய பங்கா அல்லது மறைமுகமான செயல்பாடற்ற பங்கா என்பது தொடர்பற்றது. பொது உட்கருத்திற்கு நேரடி சாட்சியம் இருப்பது அரிது. இது, குற்றத்தில் பங்கெடுத்த ஒவ்வொருவருக்கும் எதிராக கிடைத்துள்ள சாட்சியத்தின் தன்மையை திரளாக மதிப்பீடு செய்து வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் இருந்து உய்த்துணர வேண்டிய ஒன்று. ஒரு நபர் யாருடன் பொது உட்கருத்தை பகிர்ந்து கொள்கிறாரோ அவர்களின் செயல்களுக்கு அந்நபரும் பொறுப்பாளி ஆகிறார் என்கிற பகரப்பொறுப்பு கொள்கை தான் பொது உட்கருத்தின் அடிப்படையில் ஒருவர் குற்றவாளியென தீர்மானிக்கப்படுவதன் அடித்தளம். ஒரு செயலை செய்வதற்கான எண்ணம் அல்லது உட்கருத்து இருந்தது என்று நம்பத்தக்கவிதமாக நிறுவப்பட்டால், தாக்குதலில் நேரடியான பங்கேற்பு இல்லாவிட்டாலும், அதுவே குற்றவாளியென தீர்மானிக்க போதுமானது. ஆகவே ஒருவரை பொது உட்கருத்தின் காரணமாக குற்றவாளியென தீர்மானிக்க, அவர் தன் உடல் இயக்கத்தை கொண்டு தாக்குதலில் நேரடியாக ஈடுபட்டிருக்க வேண்டும் என்றில்லை. முன்பே ஏற்பாடு செய்யப்பட்ட

திட்டம் மற்றும் அத்திட்டத்தின் தொடர்ச்சியாக ஒருமித்து செயல்படுதல் ஆகியவற்றை சாட்சியம் வெளிப்படுத்தினால், அதிலிருந்து பொது உட்கருத்தை உணரமுடியும். ஒரு குறிப்பிட்ட விளைவை உருவாக்க வேண்டும் என்ற பொது உட்கருத்து பல நபர்களுக்கிடையே நிகழ்விடத்தில் கூட உருவாகலாம், இது ஒரு குறிப்பிட்ட வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் இருந்து புரிந்துகொள்ளக்கூடியது. நிகழ்விடத்திற்கு எதிரிகள் சேர்ந்து வருதல், அவர்களில் சிலரோ அல்லது அனைவருமோ ஆயுதம் ஏந்தியிருத்தல், தாக்குதலின் விதம், எதிரிகளின் செயல்பாடு மிக்க அல்லது செயல்பாடற்ற பங்கு, ஆகியவை பொது உட்கருத்தை உய்த்துணர உதவும் சில கூறுகள்.

14. **இராமசாமி அய்யங்கார் –எதிர்– தமிழ் நாடு அரசு (1976) 3 எஸ்.சி.சி. 779** என்ற வழக்கில், பொது உட்கருத்தை நிறுவுவது பற்றி பின்வருமாறு குறித்துரைக்கப்பட்டுள்ளது:

> "12……ஒரு குற்றமுறு செயலில், வெவ்வேறு கூட்டாளிகள் செய்த செயல்களும் வெவ்வேறாக இருக்கலாம், ஆனால் அனைவரும் ஏதேனும் ஒருவகையில் குற்றச்செயலில் பங்கெடுத்து ஈடுபட்டு இருக்கவேண்டும். உதாரணமாக, பாதிக்கப்பட்டவருக்கு உதவி செய்ய யாரும் வராதவாறு தடுப்பதற்காக மட்டுமே காவலாக நிற்கலாம், அல்லது அவர் ஏதேனும் ஒரு வகையில் பொது திட்டத்தை நிறைவேற்ற உதவி புரியலாம். அத்தகைய நபரும், திட்டமிட்ட குற்றத்தை புரியும் தன் உடன் பங்கேற்பாளர்கள்

போலவே, குற்றச்செயல் புரிகிறார். எனினும், உடல்ரீதியான வன்முறை தொடர்பான குற்றத்தில் பிரிவு 34–ஐ பயன்படுத்தவேண்டும் என்றால், எந்த குற்றத்தை புரிவது அவர்களின் குற்றமுறு கூட்டு முயற்சியின் குறிக்கோளாக இருந்ததோ அந்த குற்றச்செயலை ஏதுவாக்கும் பொருட்டு குற்றத்தை தூண்டும் அல்லது துணைசெய்யும் நபர் குற்றம் நிகழ்த்தப்படும்போது முன்னிலையாகி இருக்க வேண்டும். பொது திட்டம் நிறைவேற்றுவதற்கு ஏதேனும் ஒரு வகையில் உதவும் நபர், இவ்வாறு குற்றம் நிகழ்கையில் முன்னிலையாவது உண்மையாகவே அவர்கள் 'குற்றச்செயலில்' பங்கெடுப்பதற்கு நிகரானது. ஒரு குற்றச்செயலில் பங்கெடுக்கும் நபர்கள் ஒரு குறிப்பிட்ட விளைவை உருவாக்க வேண்டும் என்று ஒரே சமயத்தில் கருத்தொருமைப்படுவதே பிரிவு 34–இன் சாரம்சம். அத்தகைய கருத்தொருமை குற்ற நிகழ்விடத்தில் உருவாகி, அதுவே அனைவரின் எண்ணமாகவும் இருக்கலாம்....."

15. பொது உட்கருத்தை உய்த்துணர்வது குறித்து ***நந்து ரஸ்தோகி –எதிர்– பீஹார் மாநில அரசு*** (2002) 8 எஸ்.சி.சி. 9, என்ற வழக்கில், இந்த நீதிமன்றம் பின்வருமாறு கருத்துரைத்தது:

"17....அவர்கள் ஒன்றாக வந்தனர், அவர்களுள் இருவர் காவலுக்காக நின்று அரசு தரப்பு சாட்சிகள் தலையிடுவதை தடுக்கையில் மூவர் இறந்தவரை உள்ளே கொண்டுசென்றனர், பின் அவர்களுள் ஒருவர் அவரை சுட்டுக்கொன்றார்.

அதன்பின்னர் அவர்கள் ஒன்றாக தப்பியோடினர். பிரிவு 34–ஐ ஈர்க்கும்பொருட்டு குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் இறந்தவரை தாக்கியிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. குற்றம் புரிவதற்கான பொது உட்கருத்து அவர்களுக்குள் இருந்தது என்பதும், அதன் தொடர்ச்சியாக ஒவ்வொருவரும் ஒரே மாதிரியான அல்லது வெவ்வேறு விதமான தனித்த செயல்கள் மூலம் தங்களின் பங்கை நிறைவேற்றினர் என்பதும் வெளிப்பட்டால் அதுவே போதுமானது..."

16. நேர்மறையாக தாக்கும் செயலின்றி, பொது உட்கருத்தை நிறுவுவது என்பது ஒரு இன்றியமையாக்கூறு அல்ல என்று ***சுரேந்தர் சௌஹான் –எதிர்– மத்திய பிரதேச மாநில அரசு (2000) 4 எஸ்.சி.சி. 110*** என்ற வழக்கில், குறிப்பிட்டு பின்வருமாறு கருத்துரைக்கப்பட்டது:

"11. பிரிவு 34–ன்படி, எந்த குற்றத்தை புரிவது அவர்களின் குற்றமுறு கூட்டு முயற்சியின் குறிக்கோளாக இருந்ததோ அந்த குற்றச்செயலை ஏதுவாக்கும் பொருட்டு அல்லது முன்னேற்றும் பொருட்டு, அந்த நபர் குற்றம் நிகழ்த்தப்படும்போது முன்னிலையாகி இருக்க வேண்டும். பொது திட்டம் நிறைவேற்றுவதற்கு ஏதேனும் ஒரு வகையில் உதவும் நபர்கள் இவ்வாறு முன்னிலையாவது உண்மையாகவே அவர்கள் 'குற்றச்செயலில்' பங்கெடுப்பதற்கு நிகரானது. ஒரு குறிப்பிட்ட விளைவை உருவாக்க வேண்டும் என்று குற்றச்செயலில் பங்கெடுக்கும் நபர்களின் மனதில் ஒரே சமயத்தில் சிந்தனை

ஒருமிப்பதே பிரிவு 34–இன் சாரம்சம். இத்தகைய சிந்தனை ஒற்றுமை குற்றநிகழ்விடத்தில் உருவாகி, அதுவே அனைவரின் உட்கருத்தாக ஆகலாம்...."

17. ***நந்த் கிஷோர் –எதிர்– மத்திய பிரதேச மாநில அரசு*** (2011) 12 ***எஸ்.சி.சி.*** 120 என்கிற வழக்கிலும் அதே போன்று கருத்துரைக்கப்பட்டது.

18. இந்த வழக்கின் பொருண்மைகள் குறித்து விவாதிக்கையில், 1–ஆம் மேல்முறையீட்டாளர், ஆயுதம் ஏந்திய மற்ற இரு மேல்முறையீட்டாளர்களுடன் காத்துக்கொண்டு இருந்திருக்கிறார். சந்தையில் இருந்து திரும்பி சென்றுகொண்டு இருந்த இறந்துபோன இருவரையும் 1–ஆம் மேல்முறையீட்டாளர் நிறுத்தினார். அவ்வாறு நிறுத்தப்பட்ட பின்னரே, இறந்த நபர்களின் மீது தாக்குதல் தொடங்கியது. பணம் தொடர்பான ஏதோவொரு சர்ச்சை அவர்களுக்குள் இருந்திருப்பது சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து வெளிப்படையாக தெரிகிறது. கொடூர தாக்குதலின் விளைவாக அப்துல் பாராக் நிகழ்விடத்திலேயே மரணமடைந்தார். அப்துல் மோதின், 3–ஆம் மேல்முறையீட்டாளர் செய்த முதல் தாக்குதலில் காயமுற்று, அதன் பின்னர் தப்பிக்க முயன்றார். மற்ற எதிரிகளுடன் இணைந்து 1–ஆம் மேல்முறையீட்டாளரும் அவரை துரத்திச்சென்று, மாமூத் அலியின் வீட்டருகே அவரை பிடித்து கொடூரமாக தாக்கினர். பிறகு, அசைவின்றி இருக்கும் அப்துல் பாராக் கிடத்தப்பட்ட இடத்திற்கு எதிரிகள் அப்துல் மோதினை இழுத்துச் சென்றனர். கேள்விக்குரிய குற்றத்தை

புரிவதற்கான பொது உட்கருத்து 1–ஆம் மேல்முறையீட்டாளருக்கு இருந்ததை குறித்து கூடுதல் ஆதாரம் தேவையில்லை என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, அந்த காரணத்திற்காக எந்தவொரு பொது உட்கருத்தும் இருந்தது என்பதை மறுத்து, தாக்குதல் தொடர்பாக 1–ஆம் மேல்முறையீட்டாளரின் பங்கோ அல்லது செயலோ இல்லை என்ற அவரது வாதுரையின் பேரில், சந்தேகத்தின் பலனை அவருக்கு அளிப்பதற்கான காரணத்தை நாங்கள் காணவில்லை.

19. விளைவாக, மேல்முறையீட்டாளர்களின் குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத்தீர்ப்பில் நாங்கள் தலையிடுவதற்கு எந்த காரணத்தையும் காணவில்லை. இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் தீர்ப்புகளை புரிந்துகொள்வதற்கும் கல்வி சார்ந்த நோக்கங்களுக்காக பயன்படுத்திக்கொள்வதற்கும் மட்டுமேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."